DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SPL.SC.No.1/2024**

PROSECUTION WITNESS No. 1

| | |
|---|---|
| Name | : R. Radhakrishnan |
| Father's Name | : Ramanujam |
| Age | : 67 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 8th day of September, 2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது, எண்.15, 9 வது குறுக்கு தெரு, வுட் க்ரீக் கவுண்டி, நந்தம்பாக்கம், சென்னை என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் 1985 ம் வருடம் உதவி சிறைஅலுவலராக பணியில் சேர்ந்தேன். 2015 ம் ஆண்டு துணை சிறை அலுவலராக பணி ஓய்வு பெற்றேன். 14.01.2012 அன்று புழல் மத்திய சிறை 2 ல் சிறை அலுவலராக பொறுப்பில் இருந்த போது, மாலை 6 மணிக்கு மேல் நித்யா என்ற நித்யராஜ், த,பெ. சாய்ராம், என்பவரை கே7, ICF காவல் நிலைய குற்ற எண்.24/2012 சட்டப்பிரிவுகள் 392, 420 இ.த.ச வழக்கில் 5 வது பெருநகர குற்றவியல் நீதித்துறை நடுவர் உத்தரவின்படி சிறையில் அனுமதிக்க கே7, ICF

காவல் நிலைய போலீசார் அழைத்து வந்தார்கள். அந்த நபருக்கு உடல் முழுவதும் காயங்கள் இருந்தது. எனவே சிறை மருத்துவரை அழைத்து அந்த நபரை பரிசோதனை செய்தோம், அவருக்கு சிகிச்சை அளிக்க வேண்டி ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். 15.01.2012 அன்று மாலை 7.55 மணியளவில் மேற்படி நபரை மீண்டும் சிறையில் அனுமதிக்க அழைத்து வந்தார்கள். அவரை பெற்று சிறை மருத்துவமனையில் அனுமதித்தோம். 16.01.2012 அன்று மதியம் 1.30 மணியளவில் அவர் உடல்நிலை மோசமானது, அவரை மீண்டும் சிகிச்சைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம், அன்று மாலை 4.15 மணிக்கு அந்த நபர் இறந்து விட்டதாக எங்களுக்கு தகவல் அளிக்கப்பட்டது, உடனே அவரது உறவினருக்கு தகவல் தெரிவித்தோம். நான் இது சம்பந்தமாக புழல் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தேன். அந்த புகார் என்னிடம் காட்டப்படுவதுதான், அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான், அந்த புகார் **அ.சா.ஆ. 1**. புழல் காவல் நிலையத்தில் என்னை உதவி ஆய்வாளர் விசாரித்தார். பின்னர், இந்த வழக்கானது CBCID க்கு மாற்றப்பட்டது. CBCID துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

## <u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

நான் துணை சிறை அலுவலர் தான். உதவி சிறை அலுவலர்தான் வரக்கூடிய சிறைவாசிகளை உள் அனுமதிப்பதும், வெளி அனுப்புவதும் செய்வார் என்றால் சரிதான். இவ்வழக்கில் இறந்து போன நித்யா என்ற நித்யராஜ்,

என்பவரை புழல் சிறைக்குள் 14.01.2012, 15.01.2012 மற்றும் 16.01.2012 ஆகிய தேதிகளில் உள் அனுமதி செய்த போதும், வெளி அனுப்பிய போதும் நான் பதிவேடுகளில் கையொப்பம் இட்டேனா என்றால் இல்லை. அ.சா.ஆ.1 புகாரில், இறந்து போன நபரை புழல் சிறைக்கு முதன் முதலில் அழைத்து வந்த போது, அவருக்கு உடல் முழுவதும் காயம் இருந்தது என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. உடல் நலக் குறைவாக இருந்தார் என்றுதான் கூறியுள்ளேன். அவ்வாறு போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன். மேற்படி நபரை சிறைக்கு அழைத்து வந்ததும், வெளி அனுப்பியதும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் ஆவணங்களை சரிவர பார்க்காமல் CBCID கேட்டுக் கொண்டதன்படி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

---

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SPL.SC.No.1/2024**

PROSECUTION WITNESS No. 2

| | |
|---|---|
| Name | : Dinesh |
| Father's Name | : Velumani |
| Age | : 34 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 8th day of September, 2025.

---

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது, எண்.44, கே. எம். கார்டன், கார்ப்பரேஷன் லேன், பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, சென்னை –12 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். எனது மனைவி பெயர் காஞ்சனா ஆகும். நான் தற்போது, பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். 11.01.2012 அன்று இரவு 7.00 மணியளவில் அண்ணாநகர் Jayam & Co. என்ற நிறுவனத்தில் எனது மனைவி வேலை செய்து வந்தார், அப்போது நான் அவரை அழைத்து வருவதற்காக எனது இருசக்கர வாகனத்தில் சென்றேன், அவரை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு திரும்ப வரும்போது அயனாவரம் Joint Office அருகே 7.30 மணியளவில் நாங்கள் இருவரும் பேசிக் கொண்டே நடந்து

வரும்போது, அங்கு ஒருவர் Discovery Bike ல் வந்து இங்கு என்ன பண்ணிட்டு இருக்கீங்க என்று கேட்டார். அவருக்கு 25, 26 வயது இருக்கும். அவரது பைக்கின் பக்கவாட்டில் ஒரு லத்தி வைத்திருந்தார், நான் அவரிடம் நாங்கள் பேசிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னோம், அப்போது அவர் என் மனைவியின் கையிலிருந்த செல்போனை அவரிடமிருந்து பிடுங்கிவிட்டார். அந்த இடம் Joint Office க்கு பின்பகுதியிலுள்ள Bill Clinton ரோடு ஆகும். நான், ஏன் போனை பிடுங்கினீர்கள் என்று கேட்ட போது, அவர் தன்னை போலீஸ் என்று கூறினார். அவர், நீங்கள் வந்து K7, ICF காவல் நிலையம் வந்து போனை வாங்கிகொள்ளும் படி கூறினார். அப்போது அங்கு ஜீப்பில் ICF போலீசார் மூன்று பேர் வந்தார்கள். அவர்கள் வந்து என்னிடம் அவர் என்ன செய்தார் என்று கேட்டார்கள், நான் போலீஸ் என்று சொல்லி போனை பிடுங்கி கொண்டதாக கூறினேன். காவல் நிலையத்தில் வந்து புகார் கொடுக்கும்படி என்னையும், என் மனைவியையும் அழைத்து சென்றார்கள், நான் எனது இருசக்கர வாகனத்தில் எனது மனைவியோடு சென்றேன், அங்கு நான் புகார் கொடுத்தேன், அதில் நானும், எனது மனைவி இருவரும் கையொப்பமிட்டோமா என்று தற்போது ஞாபகமில்லை. அந்த புகாரை பார்த்தால் என்னால் கூறமுடியும் (நீதிமன்றத்தில் அந்த புகார் தாக்கல் செய்யப்படவில்லை). என்னிடம் போனை பிடுங்கியவரை போலீசார், போலீஸ் ஜீப்பில் ஏற்றிக் கொண்டு கே7, ICF காவல் நிலையம் சென்றார்கள், ICF காவல் நிலையத்தில் என்னை போலீசார் விசாரிக்கவில்லை. அதன்பிறகு 2022 ம் வருடம் ஆணையர் அலுவலகத்தில் வைத்து CBCID

ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் நடந்த விவரங்களை கூறினேன். எங்களிடம் போனை பிடுங்கியவரை இறுதியாக ICF காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன், அப்போது இரவு 8.30 மணியிருக்கும். அதன்பிறகு, அவரது பெயர் நித்யராஜ் என்று தெரிந்து கொண்டேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

CBCID என்னை விசாரித்தபோது, எங்களிடம் போனை பிடுங்கியவரை இறுதியாக ICF காவல் நிலையத்தில் இரவு 8.30 மணியளவில் பார்த்தேன் என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை. தற்போது, போலீசார் சொல்லிகொடுத்து அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரிதான். என் மீது ஓட்டேரி காவல் நிலையத்தில் 6/2018 என்ற சரித்திர பதிவேடு தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 2020 ல் என்னை குண்டர்கள் தடுப்பு சட்டத்தின் கீழ் அடைப்பு காவலில் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். என் மீது, P2 காவல் நிலையத்தில் 397 இ.த.ச–ன் கீழான இரண்டு வழக்குகளும், P1 காவல் நிலையத்தில் 384 இ.த.ச–ன் கீழான இரண்டு வழக்குகளும், G1 காவல் நிலையத்தில் 392 இ.த.ச–ன் கீழான இரண்டு வழக்குகளும், P2 காவல் நிலையத்தில் 307 இ.த.ச–ன் கீழான ஒரு வழக்கும் நிலுவையிலுள்ளது என்றால் சரிதான். எங்களிடம் போனை பிடுங்கியது சம்பந்தமாக நித்யராஜ் மீது நான் கொடுத்த புகாரின் நகல் என்னிடம் காட்டப்படுவதுதான், அதிலுள்ளது என்னுடைய கையொப்பம்தான், அந்த புகார் **எ.சா.ஆ.1**. அந்த புகார் உதவி ஆய்வாளர் ICF காவல் நிலையம் சட்டம், ஒழுங்கிற்கு கொடுக்கபட்டுள்ளது

என்றால் சரிதான். அந்த புகாரை கொடுக்க சொன்னது உதவி ஆய்வாளர் ICF காவல் நிலையம் சட்டம், ஒழுங்கு பிரிவு ஜானி செல்லப்பா, எனக்கு அவ்வளவாக தெரியவில்லை, என்னை மூன்று பேர் அழைத்து சென்றார்கள். CBCID போலீசார் என்னை விசாரித்த போது, காவல் நிலையத்தில் நிறைய நபர்கள் இருந்தார்கள் என்றும் அவர்கள் தான் போலீஸ் என்று கூறி இது போல் நகைகள் மற்றும் செல்போனை பறிப்பது அவரது வழக்கம் என்று கூறினார்கள் என்றும் நான் கூறியுள்ளேனா என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. எனக்கு தற்போது சிறுநீரக கோளாறு ஏற்பட்டு டையாலிஸிஸ் செய்து வருகிறேன். நான் 11ம் தேதியன்று காவல் நிலையம் செல்லவில்லை என்றாலும் 12ம் தேதிதான் புகார் கொடுத்தேன் என்றாலும் எ.சா.ஆ.1 புகாரில் தேதி 12 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் நான் அவ்வாறுதான் கையொப்பமிட்டுள்ளேன். எ.சா.ஆ.1 புகார் படி, 12 ம் தேதியன்றுதான், காஞ்சனாவை அழைத்துக் கொண்டு நான் சென்றேன் என்றால் சரிதான். எ.சா.ஆ.1 புகாரில், 12.01.2012 அன்று இரவு 10.00 மணிக்கு சிறுநீர் கழித்துக் கொண்டிருந்த போது சுமார் 22 வயது மதிக்கத்தக்க நபர் Bajaj Discovery வண்டியில் வந்து ஏன் இங்கு நிக்கிர, ஸ்டேசனுக்கு வந்து 1000 ரூபாய் பணம் கட்ட வேண்டும், இல்லையென்றால் செல்போனை கொடுங்கள் என்று கேட்டதாக கூறியுள்ளேன் என்றால் அந்த புகாரை நான் எழுதவில்லை, யார் எழுதினார்கள் என்று தெரியாது, காவல் நிலையத்தில் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள், அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். ICF போலீசார் என்னை விசாரித்தபோது, நான்

12.01.2012 தேதியிரவு சுமார் 9.00 மணியளவில் New Farrand ரோடு பட்டாளத்தில் வசிக்கும் எனது மாமன் மகள் காஞ்சனா என்பவரை பார்ப்பதற்காக சென்றேன் என்றும், பின்பு அவரை பார்த்து எனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு பட்டாளம் செல்வதற்காக பில் கிளிண்டன் சாலை முன்னால் இரவு 10.00 மணிக்கு சிறுநீர் கழித்து கொண்டிருந்தேன், அங்கு கட்டையாக சுமார் 22 வயது மதிக்கத்தக்க Bajaj கருப்புநிற மோட்டார் சைக்கிளில் வந்து எங்கள் முன்னால் நிறுத்தி நீங்கள் யார், ஏன் இங்கு நிற்கிறீர்கள், இந்த ஏரியா போலீஸ் ஸ்டேசனுக்கு 1000 ரூபாய் கட்டவேண்டும், இரண்டு பேரும் ஸ்டேசனுக்கு நடங்க, உங்க செல்போனை எடுத்துக் கொடுங்க என்று கேட்டார் என்றும் உடனே அந்த நபர் என்னடா உனக்கு திமிரா, நடங்கு ஸ்டேசனுக்கு என்று சத்தம் போட்டு என் சட்டைப்பையில் இருந்த கருப்பு வெள்ளை கலர் சாம்சங் செல்போனை எடுத்துக் கொண்டு ஸ்டேசனில் பைன் கட்டிவிட்டு வாங்கிகோங்க என்றும் நான் இந்த ஏரியா போலீஸ், உங்களை பேப்பரில் கொடுத்து அசிங்கிப்படுத்தி விடுவேன் என்றும், செல்போன் முக்கியமா, மானம் முக்கியா என்று சொல்லிவிட்டு அயனாவரம் பக்கம் சென்றுவிட்டதாகவும், எங்களுக்கு சந்தேகம் வரவே அந்த நபரை பின் தொடந்து சென்று பார்க்க அந்த நபர் அயனாவரம் பஸ் டிப்போ முன்னாடி டீக்கடையில் தனது வண்டியை நிறுத்திவிட்டு டீ குடித்து கொண்டிருந்தார் என்றும், அவர் வண்டியில் போலீஸ் லத்தி இருந்தது என்றும், அங்கிருந்தவர்களிடம் கேட்ட போது மேற்படி நபரை காண்பித்து அவர் போலீசா என்று கேட்க அந்த நபர் ஆட்டோ டிரைவர் சாம்ராஜ் என்பவர் மகன் நித்யா

என்றும், அவர் Friends of Police என்றும், மோட்டார் சைக்கிளில் லத்தியை வைத்துக் கொண்டு போலீஸ் என்று நடித்து என் செல்போனை பிடுங்கி கொண்டவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் மீண்டும் ICF காவல் நிலைய போலீசார் என்னை விசாரித்த போது எனது மறு வாக்கு மூலத்தில் 13.01.2012 இரவு சுமார் 10.00 மணியளவில் நான், காஞ்சனா, அத்தை சரளா மற்றும் மாமா அசோகன் ஆகிய நால்வரும் சென்று கொண்டிருந்தபோது என்னை ஏமாற்றி செல்போனை பறித்து சென்ற நபரை பார்த்தாகவும், அவர் எங்களை பார்த்து ஓட ஆரம்பித்ததாகவும் அவரை நாங்கள் பின் தொடர்ந்து செல்ல, எங்களிடமிருந்து தப்பிக்க Compound சுவர் ஏறி குதித்ததாகவும், அப்படியும் விடாமல் துரத்தியதாகவும், அவர் அயனாவரம் சித்த மருத்துவமனையில் கையில் கட்டு போட்டுக் கொண்டு நடந்து வந்து கொண்டிருந்தாகவும் அவரை மடக்கி பிடித்து K7, ICF காவல் நிலையத்தில் ஒப்படைத்தாகவும் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 12.01.2012 அன்று நித்யராஜை நான், காஞ்சனா, மற்றும் பொதுமக்கள் வளைத்து பிடித்து அடித்தோம் என்றால் சரியல்ல. அப்போது அங்கு போலீசார் வந்து எங்களை விலக்கி நித்யராஜை அடித்து அவர்கள் வண்டியில் ஏற்றிக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் ICF காவல் நிலையத்தில் 12.01.2012 அன்று உதவி ஆய்வாளர் சொல்படி புகார் கொடுத்து, இறந்த நித்யா என்ற நித்யராஜை 13.01.2012 அன்று இரவு 11.30 மணியளவில் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றால் சரியல்ல. நான் CBCID போலீசார் சொல்லிகொடுத்து முதல் விசாரணையில்

பொய்யான விவரங்களை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. ICF காவல் நிலையத்தில் கொடுத்த எ.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ளது தான் உண்மையான சங்கதிகள் என்றாலும் ICF காவல் நிலையத்தில் நான் கொடுத்த வாக்குமூலம் மற்றும் மறு வாக்குமூலம் சரியானது என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |